**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.**

| | |
|---|---|
| **Calendar** | : **Case No.419/2014** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W.3.ராஜேந்திரன்** |
| **Father's Name** | : பரமசிவம் |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16.09.2020.

மு.வி:

நான் எழுமலையில் வசித்து வருகிறேன். நான் ஹோட்டல் தொழில் செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்)**

23.08.2009 ஆம் தேதி மாலை 6 மணிக்கு எழுமலை பேருந்து நிலையத்தில் சாட்சி முத்துலட்சுமி, செல்வம், சாக்ரடீஸ், உத்தராஜ் ஆகிய காவலர்கள் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு சிலை பாதுகாப்பு பணியிலிருந்தபோது எதிரிகள் சோடாபாட்டில் மற்றும் பீர்பாட்டிலை கையில் வைத்துக்கொண்டு அவர்களுக்குள் சண்டை போட்டார்கள் என்றும் அவர்களை கலைந்துபோக சொன்னபோது எதிரிகள் மேற்சொன்ன சாட்சிகளை பார்த்து அசிங்கமாக பேசி பீர்பாட்டிலை வைத்து எறிந்து சாக்ரடீஸ்க்கு காயம் ஏற்படுத்தி அரசு பணி செய்யவிடாமல் தடுத்து குற்றம் புரிந்ததை பற்றி நான் நேரில் பார்த்தாக போலீசார் விசாரணையில் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு பயந்து வழக்கிற்கு மாறாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எ.த.கு.வி:

இல்லை.

## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | |
|---|---|
| **Calendar** | : **Case No.419/2014** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W.4.சேவகபெருமாள்** |
| **Father's Name** | : **குருசாமி** |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16.09.2020.

மு.வி:

நான் எழுமலையில் வசித்து வருகிறேன். நான் டீ கடை வைத்து இருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். 2009 ஆம் வருடம் விநாயகர் சதுர்த்தி விழா முடிந்த பிறகு சார்பு ஆய்வாளர் காவல் நிலையம் அழைத்து என்னிடம் கையெழுத்து கேட்டதால் நான் காவல் நிலையம் சென்று கையெழுத்து செய்தேன். போலீசார் என்னை அதன்பிறகு விசாரிக்கவில்லை. பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள 1வது கையெழுத்து **அ.சா.ஆ. 2 மற்றும் 3.**

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்)**

23.08.2009 ஆம் தேதி இரவு 7.30 மணிக்கு எழுமலை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற எண் 160-2009 வழக்கில் சம்பவ இடத்தை எழுமலை பேருந்து நிலையம் மகேந்திரன் புரோட்டா கடை அருகே பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார்செய்தார் என்றும் பின்னர் அந்த இடத்தில் கீழே கிடந்த உடைந்த கண்ணாடி பீர் மற்றும் சோடாபாட்டில்களில் 8 சிறிய துண்டுகளை அத்தாட்சிய தயார் செய்து கைப்பற்றியும் மேற்படி இரண்டு ஆவணங்களிலும் நானும் கண்ணன் என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. சார்பு ஆய்வாளர்

என்னை விசாரிக்கும்போது அது குறித்து சாட்சியம் அளித்துவிட்டு தற்போது அரசு தரப்பிற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எ.த.கு.வி:

இல்லை.